# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**:152/மா/**2025**

**நாள்: 23.07.2025**

| | |
|---|---|
| திரு.T.R. ஸ்ரீநிவாசன்<br>சென்னை 91 | மனுதாரர் |
| மண்டல அலுவலர் மண்டலம் 14<br>பெரு நகர சென்னை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திருT.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 21.04.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 23.04.2025 அன்று பெறப்பட்டு 152/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 21.04.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> “சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் குருலஷ்மி நகர், மற்றும் பாலாஜி நகர் 20வது தெருவில் மழைநீர் சாலையில் தேங்காமல் புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி தருமாறு 17.03.2025ல் மாநகராட்சி ஆணையர் மற்றும் தலைமையிட மழைநீர் வடிகால் துறை கண்காணிப்பாளர், மண்டலம் 14ன் மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் வார்டு 186ன் உதவி பொறியாளரிடம் மனு அளித்தேன்.
>
> பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் கண்காணிப்பு பொறியாளர் மழைநீர் வடிகால்துறை, சென்னை 3 அவர்கள் ம.நீ.வ.து.நா.க.எண் 24/0879/2025 நாள் 07.04.2025ல் பதில் வழங்கினார். அதில் மழைநீர் வடிகால் பணிகள் மண்டலம் 14ன் மூலம் மேற்கொள்ளப்படுவதால் இம்மனு மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மண்டலம் 14க்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.
>
> ஆனால் மண்டலம் 14ன் மண்டல அலுவலர், செயற்பொறியாளர்1, மற்றும் உதவி செயற்பொறியாளர் மழைநீர் வடிகால்துறை, வார்டு 186ன் உதவி பொறியாளர் ஆகிய அதிகாரிகள் மண்டலம் 14, வார்டு 186, குருலஷ்மி நகர், பாலாஜிநகர் 20வது தெருவில் புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி அதனை பாலாஜி நகர் 24வது தெருவில் உள்ள பழைய மழைநீர் வடிகால் இணைப்புடன் இணைத்திட திட்ட மதிப்பீடு செய்து செயலாக்கம் செய்திட எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குருலஷ்மி நகர், பாலாஜிநகர் 20வது தெருவில் மழைநீர் கட்டமைப்பு வசதி இல்லாததால் ஒவ்வொரு பருவ மழைக்கும் மழைநீர் வெள்ளமாக தேங்கி இப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிறோம். குறிப்பாக தரைத்தளத்தில் வசிப்போரின் வீடுகளில் மழைநீர் புகுந்து சோபா, பீரோ, கட்டில், மெத்தை மற்றும் தண்ணீர் இறைக்கும் எலக்டிரிகல் மோட்டார் ஆகியவை ஆண்டுதோறும் பாதிப்புக்குள்ளாகி பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது. இதனால் வயதில் முதியவர்களுக்கு மிகவும் மன வேதனை ஏற்படுகிறது.

இது குறித்து மண்டலம் 14ன் மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கும் நன்கு தெரிந்தும் மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தாமல் உள்ளனர். வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் இப்பணிகளை செய்திட மண்டலம் 14ன் மே மாதம் மாதாந்திர வார்டு குழு கூட்டத்தில் இதனை பொருளாக வைத்து தீர்மானம் நிறைவேற்றி மாநகராட்சி வளர்ச்சி நிதி அல்லது ஒப்பந்ததாரரின் savings நிதி, மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதி ஆகிய ஏதாவது ஒன்றின் நிதியை ஒதுக்கி வார்டு 186ல் குருலஷ்மி நகர், பாலாஜி நகர், 20 வது தெருக்களில் மழைநீர் கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்திட பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை விசாரணைக்கு ஏற்று விசாரணை தேதி வழங்கி, விசாரணை செய்து உதவி புரிந்து, பணிகளைதுவக்கிட ஆணை பிறப்பித்து உத்தரவிடுமாறும் பணிந்து வணங்கி வேண்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 14.5.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் கடிதம் ம.அ.14 ந.க. எண் அ10/4079/2025 நாள் 1.7.2025–ன் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 கோட்டம் 186ல் புழுதிவாக்கம் குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்று பணி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." என்று தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் குருலஷ்மி நகர் மற்றும் பாலாஜி நகர் 20வது தெருவில் மழைநீர் சாலையில் தேங்காமல் புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி தருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் மழைநீர் வடிகால் துறையிடம் கோரப்பட்டது.

ஆனால், மண்டலம் 14ன் மண்டல அலுவலகத்தால், குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெருவில் உள்ள புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி அதனை பாலாஜிநகர் 24வது தெருவில் உள்ள பழைய மழைநீர் வடிகால் இணைப்புடன் இணைத்திட திட்ட மதிப்பீடு செய்து செயலாக்கம் செய்திட எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வருகின்ற 2025 பருவமழைக்கு முன்னர் இப்பணிகளை செய்திட மண்டலம் 14ன் மாநகராட்சி வளர்ச்சி நிதி அல்லது ஒப்பந்ததாரரின் Savings நிதி, மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதி ஆகிய ஏதாவது ஒன்றின் நிதியை ஒதுக்கி, வார்டு 186ல் குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெருக்களில் மழைநீர் கட்டமைப்பு வசதியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் ஏற்படுத்திட மண்டலம் 14ன் மண்டல அலுவலர் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு வழங்கி உள்ள ம.அ.14.ந.க.எண்.அ6/4486/2025 நாள் 29.05.2025 பதில் கடிதத்தில், தெரிவித்துள்ளபடி, குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெருவில் மழைநீர் வடிகால் கட்டமைப்பினை 2025 பருவ மழைக்கு முன்னர் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் செய்திட பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் பணிகளை துவக்கிட ஆணை பிறப்பித்து உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து வணங்கி வேண்டுகிறேன்."

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவிப் பொறியாளர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

> "இம்மண்டலத்தில் K.F.N நிதி ஒதுக்கீட்டில் ரூ.60 கோடிக்கான பெரும் பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன. தற்போது வார்டு 186 (புழுதிவாக்கம்) குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க திட்ட மதீப்பீடு தயாரிக்கப்பட்டு, வரும் வார்டு கமிட்டி மாதாந்திர கூட்டத்தில் வைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின் இவ்வருட பருவ காலத்திற்குள் வடிகால் அமைக்கும் பணி நடைபெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

> பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் குருலஷ்மி நகர் மற்றும் பாலாஜி நகர் 20வது தெருவில், மழைநீர் சாலையில் தேங்காமல் புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி தருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் மழைநீர் வடிகால் துறையிடம் கோரப்பட்டது எனவும், ஆனால், மண்டலம் 14ன் மண்டல அலுவலகத்தால், குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெருவில் உள்ள புதிய மழைநீர் வடிகால் கட்டமைப்பினை ஏற்படுத்தி அதனை பாலாஜி நகர் 24வது தெருவில் உள்ள பழைய மழைநீர் வடிகால் இணைப்புடன் இணைத்திட திட்ட மதிப்பீடு செய்து செயலாக்கம் செய்திட எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் இப்பணிகளை செய்திட, மண்டலம் 14ன் மாநகராட்சி வளர்ச்சி நிதி அல்லது ஒப்பந்ததாரரின் Savings நிதி, மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதி ஆகிய ஏதாவது ஒன்றின் நிதியை ஒதுக்கி மேற்கண்ட பணியினை துவக்கிட கோரியுள்ளார் என்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறியமுடிகிறது.
>
> இம்மண்டலத்தில் வார்டு 186 (புழுதிவாக்கம்)ல் குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க திட்ட மதீப்பீடு தயாரிக்கப்பட்டு, வரும் வார்டு கமிட்டி மாதாந்திர கூட்டத்தில் வைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின் இவ்வருட பருவ மழை காலத்திற்குள் வடிகால் அமைக்கும் பணி நடைபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்

14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ல் உள்ள குருலஷ்மி நகர், பாலாஜி நகர் 20வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வரும் வார்டு கமிட்டி மாதாந்திர கூட்டத்தில் வைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின் இவ் வருட பருவ மழை காலத்திற்குள் மேற்கண்ட பணி நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாளை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்,
மனை என் 86, கதவு எண் 3/2,
பாலாஜி நகர், 23வது தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodel Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

25/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்